**பாடம் - 6**

**லாயிலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள்**

**الدرس السادس**

**شروط لا إله إلا الله**

லாஇலாஹ இல்லல்லாஹ்விற்கு ஏழு நிபந்தனைகள் உள்ளன. ஓர் அடியான் அவற்றில் எந்த ஒன்றுக்கும் முரண்படாமல் அவை அனைத்தையும் பற்றிப்பிடித்துக் கொள்ளாத வரையில் அது செல்லாது. அவை:

**1.**அறிவு: அதாவது எதிர்மறை, உடன்பாடு எனும் இரு அம்சத்துடன் இக்கலிமாவின் பொருளையும் அப்பொருள் வலியுறுத்துகின்ற செயலையும் அறிய வேண்டும். எனவே ஒரு அடியான் அல்லாஹ் மட்டுமே வணக்கத் திற்குரியவன்ளூ அவனல்லாதவற்றை வணங்குவது தவறானது என்பதைத் தெறிந்து கொண்டால் அவனே இதன் பொருளைத் அறிந்தவனாவான்.

﴿ فَاعْلَمْ أَنَّهُ لا إِلَهَ إِلَّا اللهُ ﴾ ﴿محمد: ١٩﴾

வணக்கத்திற்குரியன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீர் அறிந்துகொள்வீராக. (47:19)

وعن عثمان ﷺ، عن النبي ﷺ قال: (( من مات وهو يعلم أنه لا إله إلا الله دخل الجنة )) ﴿ مسلم: ٢٦﴾

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அறிந்த நிலையில் ஒருவன் மரணித்தால் அவன் சொர்க்கம் செல்வான். அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: (முஸ்லிம்-26)

**2.**உறுதி: அதாவது இக்கலிமாவை - ஜின், மனித ஷைத்தான்கள் ஏற்படுத்துகின்ற சந்தேகங்கள் வராமல் தெளிந்த உள்ளத்துடன் உறுதியாக மொழிவதாகும். மட்டுமின்றி இதன் பொருளை மிக உறுதியாக நம்பி இதைக் கூறிட வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ آمَنُوا بِاللهِ وَرَسُولِهِ ثُمَّ لَمْ يَرْتَابُوا ﴾ ﴿الحجرات: ١٥﴾

நிச்சயமாக (உண்மையான) முஃமின்கள் யாரென்றால் அவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிய பின்னர் (அதுபற்றி எத்தகைய) சந்தேகமும் கொள்ளமாட்டார்கள். (49:15)

عن أبي هريرة - ﷺ - أن رسول الله ﷺ قال : (( أشهد أن لا إله إلا الله و أني رسول الله ، لا يلقى الله بهما عبدٌ غيرَ شاكٍّ فيهما ، إلا دخل الجنة )) ﴿ مسلم: ٢٧﴾

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை என்றும் நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்கிறேன். இவ்விரண்டு விஷயங்களையும் எவ்வித சந்தேகமுமின்றி நம்பி ஒரு அடியான் அல்லாஹ்வை சந்தித்தால் அவன் சொர்க்கத்தில் நுழைவான். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(27)

**3.**ஏற்றுக் கொள்ளல்: அதாவது இக்கலிமாவின் எதிர்பார்ப்பு அனைத்தையும் உள்ளத்தால் உறுதி கொண்டு நாவால் மொழிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். நபி(ஸல்) அவர்கள் மூலம் வந்துள்ள எல்லாச் செய்திகளையும் மெய் என்று நம்பி அவையனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றில் எதனையும் மறுக்கலாகாது.

﴿ آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللهِ وَمَلائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ ﴾ ﴿البقرة: ٢٨٥﴾

அல்லாஹ் கூறுகிறான்: இத்தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதை நம்பினார். நம்பிக்கை கொண்டோரும் (இதை நம்பினார்கள்). இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனது வானவர் களையும் அவனது வேதங்களையும் அவனது தூதர்களையும் நம்பினார்கள். அவனது தூதர்களில் எவருக்கிடையேயும் பாரபட்சம் காட்ட மாட்டோம் செவியுற்றோம் கட்டுப்பட்டோம் எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம். உன்னிடமே (எங்கள்) திரும்புதல் உண்டு. எனக் கூறுகின்றனர். (2:285)

மார்க்கச் சட்டங்களில் அல்லது குற்றவியல் சட்டங்களில்- உதாரணமாக திருட்டு அல்லது விபச்சாரத்திற்குரிய தண்டனை பலதாரமணம் அல்லது வாரிசுரிமை சட்டம் போன்றவைகளில் சிலவற்றை ஆட்சேபிக்கிறவர்கள் அல்லது மறுப்பவர்கள் இக்கலிமாவை நிராகரிப் பவர்களில், ஏற்றுக் கொள்ளாதவர்களில் சேர்ந்து விடுகிறார்கள்.

﴿ وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ ﴾ ﴿الأحزاب:٣٦﴾.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவு செய்து விட்டால் நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் தமது அக்காரியத்தில் சுயவிருப்பம் கொள்வதற்கு உரிமை இல்லை. (33:36)